நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும். இந்த நோக்குடன் "தாய்வீடு" பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், 'தாய்வீடு' தரக் காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.

# கலைஞன் அருட்பிரகாசம்

## ஆடித்து முத்துக்கள் 47

**- ப. ஸ்ரீஸ்கந்தன் -**

எனது சிறுவயதில் பார்த்த நாடகங்கள் இன்றும் பசுமையாக நினைவில் இருப்பதற்கு நடிகர்களின் பாத்திரப் பொருத்தம், நடிப்பு மட்டும் காரணமல்ல, பிரமாண்டமான காட்சியமைப்-



புகளும் தான். அத்தகைய சிறப்புமிக்க ஒரு நாடகம் தான் அரியாலை சுதேசிய விழாவுக்காக சித்திவிநாயகர் ஆலய வீதியில் மேடையேறிய தேரோட்டி மகன்.

இந்நாடகத்தில் போர்க்காட்சியின் போது மேடையில் இருதேர்கள் எதிரும் புதிருமாக அசைந்தன. அம்புகள் தாறுமாறாகப் பறந்தன. போர் முரசங்கள் ஒலித்தன. ஒரு போர்க்காட்சி மனதில் தத்ரூபமாகப் பதிந்து கொண்டது. சிற்ப ஆசாரியார் மணியம் மாஸ்டர் இந்தத் தேர்களை உருவாக்கி இருந்தார். இவ்வாறு நெறியாளர், நடிகர்கள், பாடகர்கள், வாத்தியக் கலைஞர்கள், காட்சியமைப்புக் குழுவினர், ஒப்பனைக் கலைஞர்கள், கொப்பி பார்ப்பவர்கள் என்று ஊரின் சகல திறமைசாலிகளும் ஒன்றாகக் கூடி சுதேசிய விழாவின் பிரதான நாடகத்தைப் பிரமிக்கும் வகையில் மேடையேற்றுவர்.

தேரோட்டிமகன் நாடகத்தின் இறுதியில் வரும் போர்க்காட்சியில் அருச்சுனனுக்கு கிருஷ்ண பகவான் கீதைபற்றி உபதேசம் செய்ததும், இறுதியில் பாதி உயிரில் கர்ணன் தேரடியில் துடித்துக் கொண்டிருக்க வயோதிபராக கிருஷ்ணன் வந்து கர்ணனின் கவசகுண்டலங்களைத் தானமாகப் பெறுவதும், அப்போது ஒலித்த 'உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காது' என்ற பாடலும் மறக்க முடியாதவை.

இவ்வாறு அழகே உருவான, சாந்தமான முகபாவமும் அற்புதமான குரல் வளமும் கொண்டு மேடையில் அசல் கிருஷ்ணனாகத் தோன்றியவர் தான் எங்கள் கலைஞர் அருள் என்ற அருட்பிரகாசம் அவர்கள். 22-11-1942 இல் பிறந்த இவர் தனது ஆரம்பக்கல்வியை அரியாலை பார்வதி வித்தியாசாலையிலும், மேல் கல்வியை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திலும் பயின்றார். இவர், தொழில்முறைப் படப்பிடிப்பாளராக யாழ்ப்பாணம் ஞானம்ஸ் ஸ்டூடியோ, சித்திராலயா என்பவற்றில் கடமை புரிந்தவர். இவர் ஒரு சித்திரக்கலைஞரும் கூட.

இவர் யாழ்.கனகரட்ணம் ம.ம.வித்தியாலத்தில் 9ம் வகுப்பு படிக்கும் போது அங்கு வருடா வருடம் நடத்தப்படும் கலைமகள் விழாவில் இவர் நடித்த கட்டப்பொம்மன் என்ற நாடகம் நடைபெற்றது. அந்நாடகத்தில் வெள்ளைக்காரத் துரையாக வேடமேற்ற அருள் அவர்களை நாடக முடிவில் மேடைக்கு அழைத்த அதிபர் காபன் கந்தையா அவர்கள் அவரது நடிப்பை வெகுவாகப் பாராட்டினார். இதுவே இவரது முதல் நாடகப் பிரவேசமாகும்.

இந்தக் கட்டப்பொம்மன் நாடகம் பின்னர் நல்லூர் தெற்கு சனசமூக நிலைய ஆண்டு விழாவில் மேடையேற்றப்பட்டுப் பெரு வெற்றி கண்டது. இதில் அருள் அவர்களுடன் வி.சி. குஞ்சிதபாதம், எஸ். செல்வமாணிக்கராசா, எஸ்.எஸ். புனிதலிங்கம் (மக்கள் குரல் ஆசிரியர்) ஆகியோர் நடித்திருந்தனர். அப்போது இவருக்கு வயது 16.

அடுத்த நாடகமான 'தேரோட்டி மகன்'இல் இவர் ஏற்று நடித்த கிருஷ்ணன் பாத்திரமே இவரைப் புகழின் உச்சிக்குக் கொண்டு



சென்றது. ஆசிரியர் சதாசிவம் (சாண்டோ மாஸ்ரர்) அவர்களின் நெறியாள்கையில் மேடையேறிய இந்நாடகத்தில் பிரபல நடிகர்கள் ஈ.கே. குமரய்யா, பி. சண்முகலிங்கம், பிரான்சிஸ் ஜெனம், பொ. விஜயரட்ணம், ம. நவரட்ணம், கிஷ்ணமூர்த்தி, சந்திரா, எஸ்.எஸ். சண்முகம், ஸ்ரீபத் ஆகியோர் நடித்திருந்தனர்.

இவ்வாறு தொடர்ந்து திருவருட்செல்வர், கோவலன், பூதத்தம்பி, ஊமைத்துரை, சத்தியவான் சாவித்திரி போன்ற பல சரித்திர, இதிகாச நாடகங்களில் பிரதான பாத்திரங்களை ஏற்று நடித்த இவர் இசை நாடகங்கள் மீதான ஆர்வத்தால் மூத்த இசை நாடகக் கலைஞர் ஏ.மு. இரத்தினம் அவர்களிடம் இசை நாடக மூலங்களைக் கற்றுக்கொண்டார்.

அத்தோடு, செல்வம் அவர்கள் சந்திரமதியாகவும் இவர் அரிச்சந்திரனாகவும் வேடமேற்று நடித்த 'அரிச்சந்திர மயானகாண்டம்' நாடகத்தை நல்லூர்த் தெற்கு சனசமூக நிலைய ஆண்டுவிழாவில் மேடையேற்றினார். ஏ.மு. இரத்தினம், செல்வம் ஆகியோர் வி.வி. வைரமுத்து அவர்களுடன் சந்திரமதியாக நடித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அருள் நடித்த சமூக நாடகங்கள் அவரை வித்தியாசமான நடிகராக அடையாளம் காட்டின. அரியாலை அருணோதயா நாடக மன்றத்தின் விதியின் விளிம்பில், யாழ். சுண்டுக்குளி நாடகக் கலாமன்றத்துக்காக வி.சி. பரமானந்தம் எழுதிய குற்றம் எங்கே, பாசையூர் கிறிஸ்தோபர் எழுதிய காதலா கடமையா மற்றும் நானும் பெண்தான் போன்ற பல சமூக நாடகங்களில் பிரதான பாத்திரம் ஏற்று நடித்திருந்தார்.

இதில் 'விதியின் விளிம்பில்' நாடகத்தில் நடித்த என்.ரி. குணமும், குற்றம் எங்கேயில் தோன்றிய நடராஜா என்பவரும் பின்னாளில் 1000 தடவைகளுக்கு மேல் மேடையேறிய 'அடங்காப்பிடாரி' நாடகத்தில் இணைந்து உச்சக்கட்ட நடிகர்கள் ஆனதும், காதலா கடமையா என்ற நாடகம் மூலம் முதன் முதலாக மேடையேறிய நாகராசா பின்னாளில் 'வெளிக்கிட்டி விசுவமடுவுக்கு' போன்ற நாடகங்களைத் தந்த அரியாலை திடீர் நாடக மன்றத்தின் நாடகங்களில் தோன்றி எல்லோரையும் வயிறு குலுங்கச் சிரிக்க வைத்ததும் இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

அருள் நடித்த சமூக நாடகங்கள் அன்று பலராலும் பேசப்பட்டன. அவற்றுள் ஞான ஒளி நாடகமும் அடங்கும். அதில் மகேஸ்வரன், தேவராசா, எஸ்.எஸ். மனோகரன், எஸ். சின்னத்துரை ஆகியோரும் முக்கிய பாத்திரங்களில் நடித்திருந்தனர்.

தற்போது பிரான்சில் வாழ்ந்து வரும் இவர் அங்கு இயங்கிவரும் திருமறைக் கலாமன்றத்தின் நாடகங்களில் பங்கேற்று வருகிறார். அது மட்டுமல்ல சிறந்த சித்திரக்கலைஞரான இவர் காட்சியமைப்புகள், மற்றும் ஏனைய விழாக்களில் வைக்கப்படும் நினைவுத் தூபிகள், பெரிதளவான படங்கள் போன்றவற்றை வரைந்து வர்ணம் தீட்டும் வல்லவராக விளங்குகிறார்.

தவிர, பிரான்சில் ஒளிபரப்பாகும் ஜி.ரிவி தொலைக்காட்சியில் சந்திவெளி என்ற தொடரில் நடித்தும் வருகிறார். படலைக்குப் படலை நடிகர் சிறியுடன் இணைந்து நடிக்கும் இத்தொடர் 85 காட்சிகளைக் கடந்து ஒளிபரப்பாகி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

1958இல் ஆரம்பித்த அருளரின் கலைவாழ்வு ஒரு பொன்விழாக் காலத்தையும் கடந்து இன்றும் தொடர்கிறது. நல்ல நாடகக் கலைஞர், சிறப்பான சித்திரக் கலைஞர், புகழ் பெற்ற புகைப்படப்பிடிப்பாளர் என்று பல கோணங்களில் அவரின் கலைவாழ்வு விரிகிறது.



sriskandan@thaiveedu.com

■ ■ ■

கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■

உங்கள் நிகழ்வுகளைப் பார்ப்பதற்கும் பதிவு செய்வதற்கும்

**www.inayam.net**